**நவம்பர் – 19**

# தமிழ்நாடு செய்திகள்

## இந்தியாவின் முதலாவது பல்முனையத் தளவாடப் பூங்கா




- ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாட்டின் தளவாடப் பூங்காவினை நிறுவுவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- பிஎம் கதி-சக்தி மற்றும் தேசியத் தளவாடக் கொள்கையின் கீழ், ஏற்றுமதியினை மலிவானதாகவும், விநியோகச் சங்கிலியை மிகுந்தத் திறனுள்ளதாகவும் மாற்றச் செய்யும் முயற்சியில் (தற்போதைய 14 சதவிகிதத்திலிருந்து) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவிகிதம் என்ற அளவிற்கு தளவாடக் கட்டணங்களை கொண்டு வர இது எண்ணுகிறது.
- இந்தியாவின் முதலாவது பல்முனையத் தளவாடப் பூங்கா, திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.
- இது திருப்பெரும்புதூர் – ஒரகடம் தொழிற்சாலை வளையத்தில் தானியங்கி வாகனம் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி மையத்திற்கு அருகே அமைந்துள்ளது.

## காந்தி கிராமப் பல்கலைக் கழகம் – இளையராஜா

- பிரதம மந்திரி நரேந்திர மோடி திண்டுக்கல்லில் உள்ள நிகர்நிலைப் பல்கலைக் கழகமான காந்தி கிராம ஊரகக் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார்.
- இந்தப் பட்டமளிப்பு விழாவில் இசையமைப்பாளர்கள் இளையராஜா மற்றும் உமையாள்புரம் சிவராமன் ஆகியோருக்குக் கௌரவ முனைவர் பட்டங்கள் வழங்கப் பட்டன.
- காந்தி கிராம உயர்கல்விக்கான கிராமியக் கல்வி நிறுவனமானது 1956 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் நயி தலிம் என்ற கல்வி முறையைப் பரப்பச் செய்வதற்காக நிறுவப் பட்டது.

- இந்த நிறுவனத்தை முனைவர் T.S. சௌந்தரம் மற்றும் முனைவர் G. ராமச்சந்திரன் ஆகியோர் மேம்படுத்தினர்.



## சென்னை – மைசூரு வந்தே பாரத் விரைவு வண்டி




- பெங்களூரு KSR ரயில் நிலையத்தில் சென்னை – மைசூரு வந்தே பாரத் விரைவு வண்டியினையும், பாரத் கௌரவ் காசி யாத்திரை என்ற ரயிலையும் பிரதமர் மோடி கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- இது இந்தியாவின் ஐந்தாவதும், தென்னிந்தியாவின் முதலாவதுமான வந்தே பாரத் விரைவு வண்டியாகும்.
- மற்ற நான்கு வண்டிகள் புதுதில்லி-வாரணாசி, புதுதில்லி-ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி காத்ரா, காந்திநகர்-மும்பை மற்றும் புதுதில்லி-உனா ஆகிய வழித்தடங்களில் ஓடிக் கொண்டு இருக்கின்றன.
- இது பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலையில் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது.
- வந்தே பாரத் என்பது ஒரு மித-அதிவேக இரயிலாகும்.

- இது ஒரு தன்னைத் தானே உந்திக் கொள்ளும் இயந்திரம் கொண்ட ஒரு இரயிலாகும்.
- இது தனியாக அதற்கென்று ஒரு இயந்திரத்தைக் கொண்டிருக்கவில்லை.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஆசியான் நட்புறவு

- 2022 ஆம் ஆண்டில், ஆசியான்–இந்தியா இருவரும் தனது 30 ஆண்டுகளான கூட்டாண்மையை அனுசரிப்பதால், இது ஆசியான்-இந்தியா நட்புறவு ஆண்டாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- 1992 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் இந்தியா ஒரு துறைசார் பங்குதாரராக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2002 ஆம் ஆண்டில், இந்த உறவுமுறையானது உச்சி மாநாடு அளவிலான நிலைக்குத் தரம் உயர்த்தப் பட்டது.
- இறுதியாக, 2012 ஆம் ஆண்டில் இது உத்திசார் கூட்டாண்மையாக தரம் உயர்த்தப் பட்டது.




## 19வது ஆசியான் இந்தியா உச்சி மாநாடு

- கம்போடியாவின் பேணாம் பென் நகரில் நடைபெற்ற 19வது ஆசியான் இந்தியா உச்சி மாநாட்டில் இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் தலைமையிலான இந்தியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகக் கலாச்சார உறவுகளை தரம் உயர்த்திட வேண்டி 2002 ஆம் ஆண்டு முதல் இந்தியாவும் ஆசியானும் வருடாந்திர அளவில் உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன.
- துணைக் குடியரசுத் தலைவர் கம்போடியாவின் பேணாம் பென் நகரில் நடைபெற்ற 17வது கிழக்காசிய உச்சி மாநாட்டிலும் உரையாற்றினார்.
- பேணாம் பென்னில் நடைபெற்ற 40வது மற்றும் 41வது ஆசியான் உச்சி மாநாடுகளின்

ஒரு பகுதியாக கிழக்காசிய உச்சி மாநாடு நடத்தப்பட்டது.

- ஆசியான் குழுமத்தின் 11வது உறுப்பினராக கிழக்கு டிமோர் என்ற நாட்டினை அனுமதித்திட ஆசியான் அமைப்பு கொள்கையளவில் நட்புக் கொண்டிருக்கிறது.
- 1999 ஆம் ஆண்டில் இதில் கம்போடியா அனுமதிக்கப்பட்ட பிறகு, இந்தப் பிராந்திய மன்றத்தில் ஏறத்தாழ இரு தசாப்தங்களுக்குப் பிறகு முதலாவது புதிய ஒரு உறுப்பினர் அனுமதிக்கப்பட உள்ளது.
- கிழக்கு டிமோர் என்பது முன்னதாக இந்தோனேசியப் பிராந்தியத்தின் ஒரு பகுதி ஆகும்.
- இது 2002 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.
- இது ஆசியாவில் மிகுந்த இளைய ஜனநாயக நாடாக அதனை மாற்றியது.




## 17வது ஜி20 உச்சி மாநாடு

- இது இந்தோனேசியாவின் பாலி நகரில் நடத்தப்பட்டது.
- இந்த இரண்டு நாள் மாநாடு "ஒன்றாக மீட்கப் படுவோம், நன்றாக வலுப்பெறுவோம்" என்ற கருத்துருவில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஜி20 உச்சிமாநாட்டின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக மூன்று பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.
- அவை உணவு மற்றும் ஆற்றல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் எண்ணியல் உருமாற்றம் ஆகியனவாகும்.
- இந்தோனேசியாவால் தலைமை தாங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.
- உணவு மற்றும் பாதுகாப்பு என்ற தலைப்பிலான ஜி20 பயிற்சிப் பட்டறையில் உரையாற்றும் சமயத்தில், பிரதமர் மோடி உக்ரைனில் இந்தியாவின் நீண்டகால நிலையான பேச்சுவார்த்தை மற்றும் சாதுரியத்தை (Diplomacy) வலியுறுத்தினார்.
- இந்த நிகழ்வில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், பிரேசில் மற்றும் மெக்சிகோ நாட்டின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை.
- இந்த நிகழ்வில் இணையதள வாயிலில் உரையாற்றிட உக்ரேனிய அதிபர் விளோடிமிர் ஜெலன்கிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

- ஜி20 முக்கூட்டு என்பது ஜி20 அமைப்பிற்குள்ளாக, தற்போதைய, முந்தைய மற்றும் அடுத்து வரப்போகும் தலைமை உறுப்பினர்களை அதாவது இந்தோனேசியா, இத்தாலி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைக் குறிப்பிடுகிறது.
- இந்தியாவானது இந்தோனோசியாவிடமிருந்து 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 முதல் ஜி20 தலைமைப் பெறுப்பை ஏற்றுக் கொண்டு 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல் முறையாக ஜி20 தலைவர்களின் உச்சி மாநாட்டினை நடத்த உள்ளது.
- 2023ம் ஆண்டில் 18வது ஜி20 உச்சி மாநாடு புதுதில்லியில் நடத்தப்படும்.
- ஜி20 தலைமைப் பொறுப்பைப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ ஒப்படைத்தார்.




## பெருந்தொற்று நிதி




- அடுத்த உலகளாவியப் பெருந்தொற்றினைக் கையாள வேண்டி, ஜி20 அமைப்பின் சுகாதார மற்றும் நிதி அமைச்சர்கள் 1.4 டாலர் பில்லியன் அளவிலான பெருந்தொற்று நிதியினைத் துவக்கி வைத்தனர்.
- ஜி20 அமைப்பு உறுப்பினர்களும் ஜி20 அல்லாத உறுப்பினர்களும் சில அறக்கட்டளை அமைப்புகளும் இந்த நிதிக்குப் பங்களிப்பு செய்துள்ளன.
- இது ஜி20 தலைமைப் பதவிகளில் முறையே இந்தோனேசியா மற்றும் இத்தாலி ஆகிய

நாடுகளின் தலைமைப் பதவியின் மேம்படுத்தப்பட்டது.

❖ அமெரிக்கப் பேரரசு அதில் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு 450 மில்லியன் டாலர் நிதியினைப் பங்களித்து இருக்கின்றது.

❖ முதல்முறையாக சர்வதேசச் சமூகம் வளரும் நாடுகளில் பெருந்தொற்றைத் தடுத்தல், முன்கூட்டிய தயாரிப்பு மற்றும் பதிலெதிர் நடவடிக்கை ஆகியவற்றுக்கு என்று முதலீடு செய்வதற்காக வேண்டி அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிதியளிப்பு முறைக்கு ஒன்று கூடி இருக்கின்றது.

## உலக மக்கள்தொகை – 8 பில்லியன்




❖ 2022 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று, உலகின் மக்கள் தொகை 8 பில்லியன் (800 கோடி) என்ற அளவை எட்டியிருக்கின்றது.

❖ உலக மக்கள்தொகை, 2030 ஆம் ஆண்டு வாக்கில் 8.5 பில்லியன் என்ற அளவிற்கும், 2050 ஆம் ஆண்டு வாக்கில் 9.7 பில்லியன் என்ற அளவிற்கும், 2100 ஆம் ஆண்டு வாக்கில் 10.4 பில்லியன் என்ற அளவிற்கும் உயர்ந்திடும்.

❖ எனினும், உலகின் மக்கள்தொகை 7 பில்லியனிலிருந்து 8 பில்லியனிற்கு உயர்ந்திட 12 வருடங்களை எடுத்துக் கொண்டாலும், அடுத்து 9 பில்லியன் அளவினை எட்டிட தோராயமாக 12 வருடங்களை, அதாவது 2037 ஆம் ஆண்டில், அதை எட்டும்.

❖ வருடாந்திரமான உலக மக்கள்தொகை வள அறிக்கையும் 1950 ஆம் ஆண்டிலிருந்து உலகின் மக்கள்தொகை மிகக் குறைவான வேகத்தில் மட்டுமே உயர்ந்து வருகின்றது என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டில் இது ஒரு சதவிகிதத்திற்கும் கீழ் குறைந்துள்ளது.

❖ 2022 ஆம் ஆண்டில், மிக அதிக மக்கள்தொகை கொண்ட இரண்டு பிராந்தியங்களுமே, 2.3 பில்லியன் மக்கள்தொகையுடன் தென்கிழக்கு ஆசியாவும் 2.1 பில்லியன் மக்கள்

தொகையுடன் மத்திய மற்றும் தெற்காசியாவும் என ஆசியாவிலேயே அவை அமைந்து உள்ளன.

- ஐக்கிய நாடுகள் அவையின் கணிப்பின்படி, 2023 ஆம் ஆண்டு வாக்கில் உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக சீனாவை விஞ்சி இந்தியா உருவெடுக்க இருக்கின்றது.
- உலகின் மொத்த அளவில் மூன்றில் ஒரு பங்கினை சீனாவும் இந்தியாவும் கொண்டு உள்ளன.
- சீனாவிற்கான உலக வங்கியின் கணிப்பின்படி 1.4 பில்லியன் மக்கள்தொகையை விட இந்தியா ஆனது மக்கள்தொகையை 1.38 பில்லியன் எனக் கணித்துள்ளது.
- 2050 ஆம் ஆண்டு வரையில் உலக மக்கள்தொகையில் பாதியளவிற்கும் மேலான அளவில் எகிப்து, காங்கோ, எத்தியோப்பியா, நைஜீரியா, இந்தியா, பாகிஸ்தான், தான்சானியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய 8 நாடுகளில் மட்டும் கணிக்கப்பட்ட அதிகரிப்பு இருக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## நாணயக் கண்காணிப்புப் பட்டியல் – இந்தியா

- அமெரிக்காவின் கருவூலத்துறை தனது நாணயக் கண்காணிப்புப் பட்டியலில் இருந்து இத்தாலி, மெக்சிகோ, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் சேர்த்து இந்தியாவையும் அதிலிருந்து நீக்கியுள்ளது.
- நாணயக் கண்காணிப்புப் பட்டியலின் ஒரு பகுதியாக சீனா, ஜப்பான், கொரியா, ஜெர்மனி, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய 7 நாடுகள் உள்ளன.
- நாணயத்தைத் தவறாக கையாள்பவர்கள் என்பது அமெரிக்க டாலர் நாணயத்திற்கு எதிராக தங்கள் நாட்டு நாணயத்தின் மதிப்பினை வேண்டுமென்றே குறைப்பது என்ற ஒரு நியாயமற்ற நாணய மதிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகளுக்கு அமெரிக்க அரசால் வழங்கப்படும் ஒரு அடையாளம் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலக கரிம வரவு செலவு அறிக்கை 2022




- மனித நடவடிக்கைகளால் உமிழப்படும் கரிமத்தைக் கணக்கிடச் செய்யும் ஒரு அறிவியலாளர்கள் குழுவான உலக கரிமத் திட்டத்தால் இந்த அறிக்கை வெளியிடப்

பட்டது.

- இந்த அறிக்கை வளிமண்டலத்தில் கரியமில வாயு குறைந்ததற்கான தடயம் எதுவும் இல்லை எனக் கூறியுள்ளது.
- புவி உடனடியாக வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற அளவிற்குள் தடுத்து நிறுத்த வேண்டிய ஒரு கட்டாயத்தில் உள்ளது.
- 2022ம் ஆண்டில் வளிமண்டலத்தில் செலுத்தப்படும் உலகளாவியக் கரிம உமிழ்வுகளின் அளவானது 40.6 பில்லியன் டன்கள் கரியமில வாயு என்ற அளவினை எட்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தக் கணிப்பானது, 2019 ஆம் ஆண்டில் மொத்த வருடாந்திர அளவில் மிக அதிக அளவில் உமிழப்பட்ட 40.9 பில்லியன் டன்கள் கரியமில வாயு என்ற அளவிற்கு மிக அருகாமையில் உள்ளது.
- கணிக்கப்பட்ட உமிழ்வில், சீனா (0.9 சதவிகிதம்), ஐரோப்பிய ஒன்றியம் (0.8 சதவிகிதம்) ஆகியவற்றில் குறைந்தாலும், அமெரிக்கா (1.5 சதவிகிதம்), இந்தியா (6 சதவிகிதம்) மற்றும் எஞ்சியிருக்கும் உலகின் பிற பகுதிகளில் (1.7 சதவிகிதம்) அதிகரிக்கும்.
- 2022ம் ஆண்டில் இந்தியாவில் பெரும்பாலும் நிலக்கரி உமிழ்வில் ஏற்படும் ஒரு ஐந்து சதவிகித அதிகரிப்பால், 6 சதவிகித அளவிற்கு அதிக அளவிலான உமிழ்வு ஏற்படும்.
- 2021 ஆம் ஆண்டில், உலகளாவியக் கரிம உமிழ்வுகளில் சீனா (31 சதவிகிதம்), அமெரிக்கா (14 சதவிகிதம்) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (8 சதவிகிதம்) ஆகியன பெரும்பான்மையான உமிழ்வு நாடுகளாகும்.
- இந்தியா உலக கரிம உமிழ்வில் 7 சதவிகிதப் பங்களிப்பைக் கொண்டுள்ளது.
- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2022ம் ஆண்டில் இந்தியாவானது உலகில் கரிம உமிழ்வில் மிக அதிக அளவிலான அதிகரிப்பைச் சந்திக்க உள்ளதாக எதிர்பார்க்கப் படுகின்றது.
- கரிம உமிழ்வில் இரண்டாவது பெரிய அதிகரிப்பினை அமெரிக்கா பதிவு செய்ய உள்ளதாக கணிக்கப்பட்டு இருக்கின்றது.
- மொத்த உமிழ்வு அளவில் உலகளவில் இந்தியா மூன்றாவது இடத்திலும், தனிநபர் உமிழ்வில் இந்தியா உலகில் மிகவும் குறைவானது என்றும் தரவரிசைப் படுத்தப் பட்டு உள்ளது.

## நீண்டகால – குறைந்த உமிழ்வு மேம்பாட்டு உத்தி




- எகிப்தின் ஷரம் எல் ஷேக்கில் நடைபெற்ற, ஐக்கிய நாடுகள் சபையின் 27வது

உறுப்பினர்களுக்கான மாநாட்டில் (COP27) பருவநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தத்திடம் இந்தியா இதனைச் சமர்ப்பித்தது.

- 2022ம் ஆண்டிற்குள்ளாக இந்த ஆவணத்தை UNFCCC அமைப்பின் 195 உறுப்பினர் நாடுகளும் சமர்ப்பிக்க கடமைப்பட்டு உள்ளன.
- இந்தியாவின் LT-LEDS உத்தி, ஒரு குறைந்த உமிழ்விற்கான பாதைக்கான மாற்றத்திற்கு வேண்டி நிறுவப்பட்டது.
- இந்த LT-LEDS உத்தியானது, உலக கரிம வரவு செலவுப் பட்டியலில் இந்தியாவிற்கான ஒரு சமபங்கு உரிமைக்காகவும், நியாயமான பங்கிற்காகவும் வேண்டிய ஒரு கட்டமைப்பில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- அடுத்தத் தசாப்தத்தில் குறைந்தபட்சம் மூன்று மடங்கு என்ற அளவிற்கு தனது அணுசக்தி உற்பத்தித் திறனை அதிகரிப்பது என்பதின் மீது இது மையம் கொண்டு உள்ளது.
- மேலும் இது உயிரி எரிபொருளின் பயன்பாட்டினை, குறிப்பாக பெட்ரோலுடன் எத்தனாலைக் கலந்து பயன்படுத்துவதனை அதிகரிக்கச் செய்வதில் கவனம் செலுத்த எண்ணுகின்றது.
- மேலும் இது போக்குவரத்துத் துறையில் குறைந்த கரிம வளர்ச்சியினை மேம்படுத்த செய்திடுவதற்காக பசும் ஹைட்ரஜன் என்ற எரிபொருளின் பயன்பாட்டினை அதிகப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மீத்தேன் எச்சரிக்கை மற்றும் பதிலெதிர்ப்பு முறை




- இது எகிப்தின் ஷரம் எல் ஷேக்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றம் மீதான கட்டமைப்பு ஒப்பந்தம் மீதான 27வது உறுப்பு நாடுகளின் மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இது உலக வெப்பமாதல் வாயுக்களைக் கையாள்வதன் மூலம் பருவநிலை மாற்றத்தின் வேகத்தைத் தணிக்கும் உலகளாவிய முயற்சிகளில் ஒரு பகுதியாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் சர்வதேச மீத்தேன் உமிழ்வு கண்காணிப்பு உத்தியின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டது.
- இது மீத்தேன் உமிழ்வுகளை கண்டறிந்து அதை நிவர்த்தி செய்திட நடவடிக்கைகள் எடுத்திட அரசாங்கங்களை இயலச் செய்திடும் வகையில் ஒரு செயற்கைக் கோள் அடிப்படையிலான அமைப்பாகும்.
- இதுவே மீத்தேன் உமிழ்வினைக் கண்டறிந்து வெளிப்படையாக அறிவிப்பு வெளியிடச்

செய்யும் முறைமைகளை இணைக்கச் செய்திடும் வகையில் பொதுவாக கிடைத்திடச் செய்யும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.

- பருவநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கு இடையேயான மன்றத்தைப் பொறுத்த வரையில், 2030ம் ஆண்டிற்குள் உலகம் கட்டாயமாக குறைந்தபட்சம் 30 சதவிகிதம் என்ற அளவிற்கு மீத்தேன் உமிழ்வுகளைக் குறைக்கச் செய்ய வேண்டும்.
- இது 1.5 டிகிரி செல்சியஸ் என்ற ஒரு வெப்பநிலை வரம்பிற்குள்ளாக உலக வெப்பமய மாதலைத் தடுத்து நிறுத்தச் செய்யும் உலக மீத்தேன் உறுதிமொழியின் ஒரு இலக்கு ஆகும்.

## உலக கவசப் பாதுகாப்புத் திட்டம்




- எகிப்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 27வது உறுப்பினர்களின் மாநாட்டில், ஜி7 தலைமையிலான உலக கவசப் பாதுகாப்புத் திட்டமானது வெளியிடப்பட்டது.
- இது பருவநிலைப் பேரிடர்களால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு நிதியளிக்கச் செய்திடும் ஒரு நிதியளிப்பு முறையாகும்.
- இது 'இழப்பு மற்றும் சேதம்' என்ற முறையை மாற்றுவதற்குப் பதிலாக அதன் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு நல்கிட எண்ணுகின்றது.
- ஜி7 'உலக கவசப் பாதுகாப்பு' முன்னெடுப்பிடமிருந்து நிதியுதவி பெறும் முதல் பெறுநர்களில் பாகிஸ்தான் இருக்கும்.
- ஜி7 குழுமம் மற்றும் பருவநிலை ரீதியில் பாதிக்கப்படக் கூடிய நாடுகளின் ஜி20 குழுமம் ஆகியன இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகும்.
- பாதிக்கப்படக்கூடிய பருவநிலை மன்றத்தின் பாதிக்கப்படக்கூடிய இருபது (வி20) என்ற குழுமத்தின் நிதியமைச்சர் குழுவானது பருவநிலைக்கு முறையாக பாதிக்கப் படக் கூடிய பொருளாதாரங்களுக்காக ஒரு அர்ப்பணிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முன்னெடுப்பாகும்.

## 'நமது வாழ்வியல் நேரத்தில்' பரப்புரை

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் வரும் இயற்கை வரலாற்றுக்கான தேசிய அருங்காட்சியகமும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டமும் கூட்டாக இணைந்து இந்த 'நமது வாழ்வியல் நேரத்தில்' என்ற பரப்புரையைத்

தொடங்கியுள்ளன.

- இது எகிப்தில் 27வது உறுப்பு நாடுகளின் மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இந்தப் பரப்புரையானது நீடித்த வாழ்வியல் முறைக்கான செய்தித் தூதர்களாக 18 வயது முதல் 23 வயது கொண்ட இளைஞர்களை மாற்றச் செய்வதை அங்கீகரித்திட எண்ணுகின்றது.
- சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு கொண்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்திட எண்ணுகின்ற, உலகம் முழுவதும் உள்ள துடிப்பான இளைஞர்களுக்கு அதற்கான திட்டங்களுக்கான ஒரு உலகளாவிய அறைகூவலை இந்தப் பரப்புரை வழங்குகின்றது.




## LeadIT உச்சி மாநாடு




- எகிப்தின் ஷரம் எல் ஷேக்கில் நடைபெற்ற 27வது உறுப்பு நாடுகளின் மாநாட்டின் ஒரு பகுதியாக, இந்தியாவும் ஸ்வீடனும் இந்த உச்சி மாநாட்டை நடத்தின.
- தொழில்துறை மாற்றத்திற்கான தலைமை எனப்படும் இந்த LeadIT முன்னெடுப்பானது,

தொழில்துறையினைத் தணித்திட, குறைந்த கரிம மாற்றப் பாதை மீது கவனம் செலுத்துகின்றது.

- இந்த LeadIT முன்னெடுப்பானது, நியூயார்க்கில் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் பருவநிலை செயல்பாட்டிற்கான உச்சி மாநாட்டின் போது, உலகப் பொருளாதார மன்றத்தின் ஆதரவுடன் சுவீடன் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பிரதமர்களால் வெளியிடப்பட்டது.
- LeadIT முன்னெடுப்பில் தற்போதையக் கட்டமானது 2023ம் ஆண்டில் நிறைவடைய இருக்கின்றது.
- மேலும் அடுத்த ஆண்டானது, இது வரையில் மேற்கொள்ளப்பட்டதற்கான திறன் மற்றும் சாதனைகளைப் பிரதிபலிக்கச் செய்வதற்கான ஒரு தருணமாகும்.
- தற்சமயம், இந்தக் குழுமமானது, 16 நாடுகள் மற்றும் இந்தியாவிலிருந்து டால்மியா சிமென்ட், மஹிந்திரா குழுமம் மற்றும் ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் உள்ளிட்ட 19 நிறுவனங்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கின்றது.
- இதன் செயலகமானது, சுவீடனில் உள்ள ஸ்டாக்ஹோம் சுற்றுச்சூழல் நிறுவனத்தால் நிர்வகிக்கப் படுகின்றது.

## இந்தியாவின் குளிர்ப் பதனச் சங்கிலித் திட்டம்




- எகிப்தின் ஷரம் எல் ஷேக்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு ஒப்பந்தத்தின் 27வது உறுப்பினர்கள் மாநாட்டில், 'நீடித்த உணவு குளிர்ப் பதனச் சங்கிலி, வாய்ப்புகள், சவால்கள் மற்றும் அடுத்த கட்டத்தை நோக்கி' என்ற அறிக்கையானது வெளியிடப்பட்டது.

- உணவுப் பதப்படுத்துதல், அதை உறையிடுதல், அதன் நுகர்வு மற்றும் விநியோக அமைப்புகளில் குளர்பதனச் சங்கிலிகள் வறுமை மற்றும் பட்டினியின் சுழற்சியில் இருந்து லட்சக்கணக்கான மக்களை வெளியேற்றுவதற்கு மிகவும் முக்கியமானது ஆகும்.
- இது 2050ம் ஆண்டிற்குள்ளாக, ஒரு கூடுதல் அளவாக இரண்டு பில்லியன் மக்களுக்கு உணவளிக்கச் செய்திடும் சவாலை நிறைவேற்றுவதில் உதவியாக இருக்கும்.
- உணவு நட்டம் மற்றும் இழப்பானது உலகளாவியப் பசுங்குடில் வாயு உமிழ்வில் ஏறக்குறைய 8 முதல் 10 சதவிகித அளவிற்குப் பொறுப்பானதாக இருக்கும்.

## தண்ணீர் ஏற்பு மற்றும் பதிலெதிர்ப்பு செயல்திட்டம்




- முன்னதாக தண்ணீர் ஏற்பு அல்லது பதிலெதிர்ப்பு மீதான செயல் என்று அறியப்பட்ட தண்ணீர் ஏற்பு மற்றும் பதிலெதிர்ப்புச் செயல்திட்டத்தை 27வது உறுப்பினர்களின் மாநாடானது வெளியிட்டு இருக்கின்றது.
- இது குறிப்பாக ஆப்பிரிக்காவின் கொம்பு முனைப் பகுதியில் வறட்சியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் ஆப்பிரிக்காவிற்கு முன்னுரிமைக் கவனம் என்ற ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இது ஆப்பிரிக்க ஒன்றியம், தண்ணீர் மற்றும் பருவநிலைக் கூட்டணித் தலைவர்கள், உலக வானிலை அமைப்பு மற்றும் தண்ணீருக்கான ஆப்பிரிக்காவின் மந்திரிகள் மன்றம் மற்றும் இன்ன பிறர் ஆகியோரது ஒத்துழைப்பின் ஒரு விளைவாகும்.
- இது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் வேண்டிய நீரின் பற்றாக்குறை மற்றும் கிடைக்குந் தன்மைத் தகவலைப் புரிந்து கொள்ள உதவிடும் துல்லிய நீரியல் தரவுகள், தண்ணீர் மற்றும் பருவநிலை குறித்தக் கணக்கெடுப்பு மற்றும் உறைபனி மண்டலம் மீதான தகவல் அமைப்பு போன்ற உலகளாவியத் தண்ணீர்த் தகவல் சேவைகளைக் கொண்டு உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## வளமைக்கான சிலை

- பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தின் வளாகத்திற்குள் பெங்களூரு நகர நிறுவனரான கெம்பே கவுடாவின் சிலையினைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- வளமைக்கான சிலை என்பது பிரகதிய பிரதிமே என்றும் அறியப்படுகின்றது.
- இந்தச் சிலை என்பது ஒரு நகரத்தை நிறுவியத் தலைவருக்கான முதலாவது மற்றும் உயரமான வெண்கலச் சிலை என்ற வகைக்காக உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற ஒரு சாதனையினைக் கொண்டுள்ளது.

- நாடபிரபு ஹிரியா கெம்பேகவுடா விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த, 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு படைத் தலைவர் ஆவார்.
- இவர் 1537 ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசான அச்சுத ராயரிடமிருந்து அனுமதி பெற்று பெங்களூர் கோட்டையையும், நகரத்தையும் கட்டினார்.
- இவர் தெலுங்கு மொழியில் ஒரு யக்சகானா நாடகமான கங்கா கௌரி விலாசம் என்பதை இயற்றினார்.
- ஒற்றுமைக்கான சிலையை வடிவமைத்தச் சிற்பியான ராம் வி சுதர் என்பவரால் இந்த சிலை கருத்துருவாக்கம் செய்யப்பட்டு வடிவமைக்கப் பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வெங்கி ராமகிருஷ்ணன்



- இந்தியாவில் பிறந்து நோபல் பரிசு பெற்றவரான பேராசிரியர் வெங்கி ராம கிருஷ்ணன், அறிவியலுக்கான அவரது தனித்துவமானச் சேவைக்காக பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸ் மூலம் பெருமைமிகு தகுதிக்கான சிறப்பு விருது வழங்கி

கௌரவிக்கப்பட்டார்.

- ஐக்கியப் பேரரசைச் சேர்ந்த மூலக்கூறு விஞ்ஞானியான இவர், 2022 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் மறைந்த தனது இறப்பிற்கு முன்பாக அமரர் இரண்டாம் எலிசபெத் ராணியால் ஒரு வரலாற்று ஆணை மூலம் நியமனம் செய்யப் பட்ட ஆறு விருதாளர்களில் ஒருவர் ஆவார்.
- மேலும் மூன்றாம் சார்லஸ் மன்னரால் நியமிக்கப்பட உள்ள முதல் நபரும் இவரே ஆவார்.
- இவர் தமிழ்நாட்டில் சிதம்பரம் நகரில் பிறந்தவர் ஆவார்.
- இவர் 2009ம் ஆண்டில் தனது எலும்புக் கட்டமைப்பு மீதான ஆராய்ச்சிக்காக வேதியியல் பிரிவில் நோபல் பரிசு பெற்றதோடு, 2012 ஆம் ஆண்டில் ராணியால் வீரப் பெருந்தகை அல்லது நைட் என்ற பட்டமும் அளிக்கப்பட்டார்.
- இந்த தகுதிக்கான சிறப்பு விருதானது 1902ம் ஆண்டில் ஏழாவது எட்வர்ட் மன்னரால் நிறுவப் பட்டது,
- தகுதிக்கான சிறப்பு விருதானது பிரிட்டிஷ் பேரரசால் அளிக்கப்படுகின்ற ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த கௌரவத்திற்கான முத்திரை ஆகும்.

## தேசிய விளையாட்டு விருதுகள் 2022

| | | | |
|---|---|---|---|
| 2022 | **Avinash Sable** | Athletics | Male |
| 2022 | **Lakshya Sen** | Badminton | Male |
| 2022 | **Prannoy H. S.** | Badminton | Male |
| 2022 | **Amit Panghal** | Boxing | Male |
| 2022 | **Nikhat Zareen** | Boxing | Female |
| 2022 | **Bhakti Kulkarni** | Chess | Female |
| 2022 | **R Praggnanandhaa** | Chess | Male |
| 2022 | **Deep Grace Ekka** | Hockey | Female |
| 2022 | **Shushila Devi Likmabam** | Judo | Female |
| 2022 | **Sakshi Kumari** | Kabaddi | Female |
| 2022 | **Nayanmoni Saikia** | Lawn Bowl | Female |
| 2022 | **Sagar Kailas Ovhalkar** | Mallakhamba | Male |
| 2022 | **Elavenil Valarivan** | Shooting | Female |
| 2022 | **Om Prakash Mitharwal** | Shooting | Male |
| 2022 | **Sreeja Akula** | Table Tennis | Female |
| 2022 | **Vikas Thakur** | Weightlifting | Male |
| 2022 | **Anshu Malik** | Wrestling | Female |
| 2022 | **Sarita Mor** | Wrestling | Female |
| 2022 | **Praveen Kumar** | Wushu | Male |
| 2022 | **Manasi Girishchandra Joshi** | Badminton | Female |
| 2022 | **Tarun Dhillon** | Badminton | Male |
| 2022 | **Swapnil Sanjay Patil** | Swimming | Male |
| 2022 | **Jerlin Anika** | Badminton | Female |

- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் இந்த விருதுகளை அறிவித்துள்ளது.

- மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா என்ற விருதானது, சென்னையைச் சேர்ந்த மேசைப் பந்தாட்ட வீரரான அச்சாந்தா சரத் கமல் என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இது நாட்டின் விளையாட்டுத் துறையில் மிக உயரிய விருதாகும்.
- இது கடந்த நான்கு ஆண்டுகளில், ஒரு பிரமிக்கத்தக்க மற்றும் மிகச்சிறப்பான திறமையை வெளிப்படுத்திய விளையாட்டு வீரருக்கு வழங்கப்படுகின்றது.
- அர்ஜீனா விருது என்பது கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு மிகத் திறமையான விளையாட்டினை வெளிப்படுத்தியமைக்காக வழங்கப்படுகின்றது.
- தமிழ்நாட்டினைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் R.பிரக்ஞானானந்தா மற்றும் துப்பாக்கிச் சுடும் வீரரான இளவேனில் வாலறிவன் ஆகியோருக்கு அர்ஜீனா விருதுகள் வழங்கப் பட்டன.
- துரோணாச்சாரியா விருது ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் திறமையான மற்றும் தகுதி மிக்கப் பயிற்சியாளர்களுக்காக வழங்கப்படுகின்றது.
- தயான்சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருதானது, தங்களது திறமையின் மூலம் விளையாட்டிற்கு மிகுந்த அளவில் பங்களிப்பினைச் செய்த விளையாட்டு வீரர்களை கௌரவிக்க வழங்கப் படுகின்றது.
- ராஷ்ட்ரிய கேல் ரத்னா புரஸ்கார் என்பது தேசிய மற்றும் மாநில அளவில் இருக்கும் விளையாட்டு அமைப்புகள் உள்பட பெருநிறுவன அமைப்புகள், விளையாட்டுக் கட்டுப்பாட்டு மன்றங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப் படுகின்றது.
- மவுலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பை என்பது பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் ஒட்டு மொத்தத் திறமையில் முன்னணியில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்படுகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## சர்வதேச இருபது 20 உலகக் கோப்பை வெற்றியாளர்




- ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டின் இருபது 20 சர்வதேச உலகக்

கோப்பையை இங்கிலாந்து அணியானது பாகிஸ்தான் அணியை வீழ்த்திக் கைப்பற்றி உள்ளது.

- ❖ இங்கிலாந்து அணியானது இரண்டாவது முறையாக இருபது 20 உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- ❖ இங்கிலாந்து அணியின் சாம் கரான் ஆட்ட நாயகன் விருதிற்கும் தொடர்நாயகன் விருதிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖ இங்கிலாந்து மட்டுமே உலகளவில் இரண்டு வெள்ளைப் பந்து கோப்பைகளை வென்ற முதல் அணியாகும் (50 மற்றும் 20)
- ❖ 2019 ஆம் ஆண்டில் தங்களது தாய் மண்ணில் அவர்கள் 50 ஓவர் உலகக் கோப்பையை வென்றனர்.
- ❖ இருபது 20 உலகக் கோப்பையை இரண்டு முறை வென்ற வகையில் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பிறகு இரண்டாவது அணி இங்கிலாந்து மட்டுமே ஆகும்.
- ❖ சர்வதேசக் கிரிக்கெட் குழுமத்தின் இருபது 20 உலகக் கோப்பைக்கான மிகுந்த மதிப்பு மிக்க அணியில், இந்தப் போட்டியின் முன்னணி ரன் குவிப்பு வீரர்களான விராட் கோலி மற்றும் சூர்ய குமார் யாதவ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## முக்கிய தினங்கள்

### உலகத் தரநிலை தினம் – நவம்பர் 10




- ❖ இது நவம்பர் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று (இவ்வாண்டு நவம்பர் 10) அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ லண்டனில் அலுவலகத்தைக் கொண்ட ஒரு வர்த்தக நிறுவனமான பட்டயத் தரநிலை நிறுவனமானது 1919 ஆம் ஆண்டில் உலகத் தரநிலை தினத்தை நிறுவியது.
- ❖ நவம்பர் 7 முதல் 11 தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் உலகத் தரநிலை வாரமும் அனுசரிக்கப் பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான கருத்துரு "தரநிலை விழிப்புணர்வு : சரியான காரியத்தை நிறைவேற்றுதல்" என்பதாகும்.

### உலக நிம்மோனியா தினம் – நவம்பர் 12

- ❖ இந்த ஆண்டிற்கான கருத்துரு என்பது உலகளவிலான நிம்மோனியா விழிப்புணர்வு பரப்புரையான 'நிம்மோலைட் 2022' என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளது.

- இந்த ஆண்டிற்கான முழக்கமானது 'நிம்மோனியா ஒவ்வொரு நபரையும் பாதிக்கிறது' என்பதாகும்.
- இது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 12 ஆம் தேதி அன்று, நிம்மோனியா நோயினைத் தடுத்திட மக்களுக்கு ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அதை அறிவுறுத்திட வேண்டி அனுசரிக்கப் படும் ஒரு உலகளாவிய நிகழ்வு ஆகும்.
- இது உலகம் முழுவதும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெரும்பான்மையான மரணத்திற்கு காரணமாகும் வகையில் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளைக் கொல்லும் உலகின் ஒரு மிகப்பெரிய தொற்று வியாதி ஆகும்.




## உலக கருணை தினம் – நவம்பர் 14




- இது 1998ம் ஆண்டில், கருணைமிக்க அரசு சாரா அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் ஒரு கூட்டணியான உலக கருணை இயக்கத்தால் நிறுவப்பட்டது.

- இந்த ஆண்டிற்கான கருத்துரு என்பது 'எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுது எல்லாம் கருணையுடன் இருங்கள்' என்பதாகும்.

## உலக நீரிழிவு நோய் தினம் – நவம்பர் 14




- 2021 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தத் தினத்திற்கான கருத்துரு என்பது 'நீரிழிவு நோய்க்கானச் சிகிச்சையினை அணுகுதல்' என்பதாகும்.
- இது முதன்முதலாக 1991ம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் மற்றும் சர்வதேச நீரிழிவு நோய்க் கூட்டமைப்பு ஆகியோரது பிரகடனத்தின் மூலம் அனுசரிக்கப்பட்டது.
- சார்லஸ் பெஸ்ட் என்பவருடன் இணைந்து இன்சுலினைக் கண்டுபிடித்த பிரடெரிக் பேண்டிங்க் என்பவரது பிறந்த தின அனுசரிப்பு நவம்பர் 14 அன்று வருவதால், அந்த தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- மேலும் 1991ம் ஆண்டில், இந்த தினம் அவரது 100வது பிறந்த நாள் அனுசரிப்பினைக் குறித்தது.

## குழந்தைகள் தினம் – நவம்பர் 14




- இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்த தினத்தை

அனுசரித்திட வேண்டி இது கொண்டாடப் படுகின்றது.

- இந்தியாவில் அலகாபாத்தில் 1889 ஆம் ஆண்டில் பிறந்த பண்டித நேருவின் 133வது பிறந்த தினத்தை இந்த ஆண்டு குறிப்பிடுகின்றது.
- முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படும் உலக குழந்தைகள் தினம் நவம்பர் 20 என்பதால், இந்தத் தினமே இந்தியாவிலும் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப் பட்டது.
- எனினும், ஜவஹர்லால் நேருவின் மறைவிற்குப் பிறகு (1964), இந்தியப் பாராளுமன்றத்தில் அவரது பிறந்த நாளைக் குழந்தைகள் நாளாக அனுசரித்திட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஜார்க்கண்ட் உருவாக்கத் தினம் – நவம்பர் 15




- இது இந்தியாவின் 28வது தினமாக 2000ம் ஆண்டு நவம்பர் 15 அன்று பீகார் சீரமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது.
- நவம்பர் 15 என்பது வரலாற்றுப் புகழ்மிக்க பகவான் பர்சா முண்டா என்பவரது பிறந்த தினமாகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- ஜார்க்கண்ட் என்பது புதர்நிலம் அல்லது காடுகளின் நிலம் என்றும் அறியப் படுகின்றது.
- இது இந்தியாவில் யுரேனியம், நிலக்கரி மற்றும் பைரைட் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் ஒரே மாநிலம் ஆகும்.
- இது சோட்டா நாக்பூர் பீடபூமி மற்றும் சந்தால் பர்கானா ஆகிய காடுகளை உள்ளடக்கி உள்ளது.

## ஜன்ஜாதிய கௌரவ திவஸ் 2022

- ஒரு பழங்குடியினச் சுதந்திரப் போராட்ட வீரரான பிர்சா முண்டாவினை கௌரவிக்கச் செய்வதற்காக வேண்டி, ஜன்ஜாதிய கௌரவ திவஸ் அல்லது பழங்குடியினருக்கான பெருமைமிகு தினம் என்பது நவம்பர் 15 அன்று அனுசரிக்கப்படுகின்றது.

- நவம்பர் 15 என்பது பிர்சா முண்டாவின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- பிரமர் நரேந்திர மோடி, ராஞ்சியில் பிர்சா முண்டாவின் நினைவாக தார்தி ஆபா என்று அறியப் படுகின்ற ஒரு கண்காட்சியினை அர்ப்பணித்தார்.




## தேசியப் பத்திரிக்கை தினம் – நவம்பர் 16




- இந்தியப் பத்திரிகை மன்றமானது 2022ம் ஆண்டிற்கான தேசியப் பத்திரிக்கை தினத்தை "தேசத்தைக் கட்டமைப்பதில் ஊடகத்தின் பங்கு" என்ற கருத்துருவின் கீழ் அனுசரித்தது.
- இது இந்தியப் பத்திரிக்கை மன்றத்தைக் கௌரவித்து அதற்கு மரியாதை அளித்திட எண்ணுகின்றது.
- இந்தியப் பத்திரிக்கை மன்றமானது 1966ம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி அன்று நிறுவப் பட்டது.
- இந்த மன்றமானது வழக்கமாக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியால் (நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய்) தலைமை தாங்கப்படுகின்றது.

- இந்தியப் பத்திரிக்கை மன்றமானது, இந்தியப் பத்திரிக்கைகளின் செய்தி வெளியிடும் தரத்தை ஆய்வு செய்வதோடு, பத்திரிக்கைச் செயல்பாடுகளின் மீது ஒரு கட்டுப்பாட்டையும் வைத்துள்ளது.
- 1956ம் ஆண்டில், முதலாவது பத்திரிக்கை ஆணையமானது, பத்திரிக்கைத் துறையின் நெறியியல் கோட்பாடுகளைப் பராமரிக்கும் பொறுப்புடன் கூடிய ஒரு சட்டப்பூர்வ அமைப்பினை உருவாக்கிட முடிவு செய்தது.
- பத்திரிக்கையின் தனிச் சுதந்திரத்தைப் பாதுகாத்திட அரசின் கருவிகள் மீது அதிகாரத்தைச் செலுத்தும் ஒரே அமைப்பு இந்தியப் பத்திரிக்கை மன்றம் ஆகும்.

## சர்வதேச சகிப்புத் தன்மை தினம் – நவம்பர் 16




- இது பன்முகக் கலாச்சாரங்களுக்கு மத்தியில் சகிப்புத் தன்மையினைக் கட்டமைத்திடுவதையும், சகிப்புத் தன்மை என்பது சமூகத்தில் ஒரு உள்ளடக்கிய பகுதி என்ற கருத்தைப் பரப்புவதையும் எண்ணுகிறது.
- 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை மகாத்மா காந்தியின் 125வது பிறந்த தின அனுசரிப்பிற்கு அஞ்சலி செலுத்தியதன் மூலம் சர்வதேச சகிப்புத் தன்மைக்கான தினத்தை அனுசரித்திட ஆரம்பித்தது.
- யுனெஸ்கோ அமைப்பானது, சகிப்புத் தன்மையையும், அகிம்சையையும் பரப்பிடச் செய்வதற்கு யுனெஸ்கோ மதன்ஜீத் சிங் பரிசு என்ற ஒன்றை உருவாக்கியது.

## தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரம் – நவம்பர் 15 முதல் 21 வரை

- இந்த வாரம் சுகாதாரத் துறையில் பச்சிளம் குழந்தைகளுக்கான ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை ஒரு முன்னுரிமைப் பகுதியாக வலுப்படுத்திட எண்ணுகின்றது.
- இது பச்சிளம் குழந்தைகளின் காலகட்டத்தில் குழந்தைகளுக்கான ஆரோக்கிய நிலைமைகளை மேம்படுத்தச் செய்வதன் மூலம் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்திட எண்ணுகிறது.
- இந்த வாரத்திற்கான கருத்துரு என்பது 'பாதுகாப்பு, தரம் மற்றும் அக்கறையாக வளர்ப்பது – புதிதாகப் பிறந்த ஒவ்வொருவரின் பிறப்புரிமை' என்பதாகும்.
- இந்திய பச்சிளம் குழந்தைகளுக்கான செயல்திட்டமானது 2014ம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- இது நாட்டில் தடுக்கக் கூடிய குறைப் பிரசவங்களையும், புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்புகளையும் குறைக்கச் செய்வதை அதிகரித்திட வேண்டும் என்பதில், '2030ம் ஆண்டிற்குள்ளாக ஒற்றை இலக்கு பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம்'

என்ற இலக்கினையும், ‘2030ம் ஆண்டிற்கு உள்ளாக ஒற்றை இலக்கு குறைப் பிரசவ விகிதம்’ என்ற இலக்கினையும் அடைத்திட எண்ணுகின்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★